சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

செய்திமடல் - 102 | 23-05-2013

16-05-2013 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : தாய்மொழிமூலக் கல்வி**

**தொடக்கவுரையாடல் : க. ஆதித்தன்**

உலகமயமாக்கலின் எதிர்விளைவுகள் கற்றல் கற்பித்தல் வழிமுறைகள்,கல்வித்திட்டவமைப்பு என கல்வித்துறையின் சகல பரிமாணங்களின் மீதும் மாறுபட்ட தாக்கங்களை தோற்றுவித்துள்ளது. வேலைவாய்ப்பு ஒன்றை மட்டுமே மையப்படுத்தி அறிவுக்கையளிப்பு இடம்பெறுவதானது கல்வித்துறையில் தாய்மொழியின் பயன்பாட்டுத்தேவை பற்றிய கேள்வியை மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் எனச்சகல தரப்பினரிடமும்தோற்றுவித்துள்ளது.ஆங்கில மொழிவழிப் பாடசாலைகளில் இணைந்து கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன் உயர்நிலை இடைநிலை கல்விமீதான அரச கட்டுப்பாடு தளர்த்தப்பட்டு உலகளாவிய கல்வி வணிக அமைப்புடன் பிணைக்கப்படுவதுமானது எதிர்காலத்தில் கற்றல் ஊடகமாக தாய்மொழி நிலைத்திருக்ககூடிய இயலுமையை கொண்டிருக்குமா என்ற சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளது.

நிர்வாக கருமங்களில் ஆங்கிலம் தவிர்க்கவியலாத இடத்தை கொண்டுள்ளது. கடந்த நூற்றாண்டில் ஆங்கிலம்காலனியாதிக்க மொழி என்ற இடத்தை கடந்து வணிக இராஜதந்திர தொடர்பாடல்களிலும் தொழிற்துறைநிர்வாக கருமங்களிலும் சர்வதேசப்பொது மொழி என்ற அந்தஸ்தை அடைந்துள்ளது.

ஆராய்ச்சி அபிவிருத்திக் கருமங்களிலும் அறிவுப்பரிமாற்ற செயல்முறையிலும் ஆங்கிலம் மையமாக இருப்பதன் மூலமாக பெரும் அறிவுச்செல்வத்தை ஈட்டியுள்ளமை அறிவுத்துறையில் ஆங்கிலத்தை தவிர்க்கவியலாத ஒன்றாக மாற்றியுள்ளது. அவ் வகையிலேயே தொழிற்றுறையிலும் ஆங்கிலம் பெற்றுள்ள இடமானது தாய்மொழி மூலகல்வியை ஒதுக்கலுக்குள்ளாக்கி வருகிறது.

எனினும் தாய்மொழிமூல கல்வி தனது முக்கியத்துவத்தை எந்தவிதத்திலும் இழக்கவில்லை என்பதுடன் கல்விச் செயன்முறையில் தாய்மொழியின் பதிலீடில்லா முக்கியத்துவத்தை கல்வியியலாளர்களும் அறிஞர்களும் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர்.

> இலங்கை போன்ற நாடுகள் தமது நாட்டை மையப்படுத்திய சுய பொருளாதாரக்கொள்கை ஒன்றைக் கொண்டிராதபோது சுயாதீனக்கல்விக் கொள்கை ஒன்றையும் கொண்டிருக்கவியலாது. இங்கு தாய்மொழிக்கல்வியை அமுல்படுத்துவதில் மையமான பிரச்சனை இதுவே.

கற்றலில் மாணவர்களை பொறுத்தவரை மொழி ஒரு ஊடகமாக தகவலுக்கு வடிவம் கொடுப்பதோடு தனித்து நின்று விடுவதில்லை மாறாக கற்றவற்றை விளங்கிக்கொள்வதிலும் கற்றவற்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள கூடிய வகையில் கருத்துகளை ஒழுங்காக வடிவமைக்கவும் தொடர்ச்சியான சிந்தனையின் மூலம் எண்ணக்கருக்களை உருவாக்கிக் கொள்வதிலும் மொழி முக்கியத்துவம் பெறுகிறது.

குழந்தைப்பருவத்திலிருந்து மொழித்திரட்டலை ஒவ்வொருவரும் சமூக பங்கெடுப்பின் மூலம் ஆரம்பிக்கிறபோதும் இளம்பருவத்தை எட்டும்போதே மொழித்திரட்டல் தர்க்க ரீதியான செயன்முறையாக விருத்தியடைகிறது. குழந்தைப்பராயத்தில் அடையாளமிடுதல் உருவப்படிமங்களாக நினைவுறுத்தல் ஒலித்தொனி வேறுபாட்டிற்கேற்ப துலங்கல் மூலம் என மொழியின் பல்வேறுபட்ட பிரயோகப்பண்புகளை இனங்கண்டு; கற்கின்றபோதும் இளம்பராயத்திற்தான் பேச்சு வினவுதல் மறுதலித்தல் என்பவற்றின் மூலம் மொழிக்கூறுகளை உள்வாங்கிக் கொள்ள முனைகிறார்கள்.

சிறுவர் பருவத்தில் சமூகத்துடனான ஊடாட்டம் அதிகரிக்கும்போது குழந்தையின் அறிவு தொடர்பான புலக்காட்சியும் மேலும் விரிவடைய தொடங்குகிறது.

**மிகுதி அடுத்த பக்கம்**



**அடுத்து வரும் தலைப்புக்கள்**

மருத்துவ ஒழுக்கவியல் (Medical Ethics)

ராஜரட்ணம் | 23-05-2013



அயோத்தி தாசர்

*அயோத்தி தாசர் (மே 20, 1845 - 1914; தமிழ்நாடு)* தென்னிந்தியாவின் முதல் சாதி எதிர்ப்புப் போராளியும் சமூக சேவகரும் தமிழ் அறிஞரும் சித்த மருத்துவரும் ஆவார். தலித் இயக்கம் உருவாக வித்திட்ட முன்னோடிகளில் இவர் ஒருவர். தலித் பின்புலத்தில் இருந்து வந்த இவர், 19 நூற்றாண்டின் இறுதியில் தலித் மக்களின் முன்றேற்றத்துக்காக அரசியல், சமயம், இலக்கியம் ஆகிய களங்களில் தீவரமாக செயற்பட்டார். அவரது இயற்பெயர் காத்தவராயன்.

பெரும் கல்விப்புலம் மிக்க குடும்பத்தில் பிறந்தவர் , இவருடைய தாத்தா பட்லர் கந்தப்பன் அவர்கள்தான் பிரதிகள் அழிந்து நூற்றாண்டுகளாக வழக்கில் இல்லாமல் போயிருந்த திருக்குறளை தன் குடும்ப சேமிப்பு ஏடுகளில் இருந்து மீட்டு எல்லிஸ் துரையிடம் வழங்கியவர் , அதன்பின் திருக்குறள் இன்றைய அச்சு வடிவுக்கு வந்தது .

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 6:00 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.

0772260165
0752151580

FB group : facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் : circle.thulaa.net

வலைப்பதிவு : circlelk.blogspot.com

## தாய் மொழி வழிக் கல்வி

முன்பக்கத் தொடர்ச்சி..

இங்கு குழந்தை தனது அனுபவங்களை சுவீகரிப்பதிலும் வெளிப்படுத்துவதிலும் சமூகத்தோடு முரணற்ற மொழியொன்றை பயன்படுத்துவதே தர்க்க ரீதியான சிந்தனை வளர்ச்சிக்கு உகந்த ஒன்றாக அமைய முடியும் இக்காலத்தில் குழந்தை மொழி தொடர்பான இடறலை எதிர் நோக்க நேரிட்டால் அது முழுமையாக ஆளுமை வளர்ச்சியின் மீதே தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

வகுப்பறைக் கல்வியில் பாடப்புத்தகம் கொண்டிருக்கும் முக்கியத்துவம் காரணமாக வகுப்பறையில் மாணவர்களின் கவனச்சிதறல் அவர்களுக்கு மிகப்பெரும் பாதகமாக அமைந்துவிடுகிறது கற்பித்தல் தாய்மொழியில் அமையும்போது வசன ஒலிப்பு வேறுபாடுகளை இலகுவாக இனங்கண்டு மொழியை விளங்கிக் கொள்;ள முடிவதால் மொழியை விளங்கிக் கொள்வதில் ஆற்றலை இழக்காமல் கருத்தில் கவனத்தை ஊன்றிச் சிந்திக்க இயலுமாயிருக்கும்.

இலங்கை காலணித்துவ காலத்தின் பின் அமுல்படுத்திய தாய்மொழி கல்வி கொள்கை காரணமாக கணிசமான பயன்களை அடைந்துள்ளது. அதே வேளை மொழிப்பாகுபாடு காரணமாக பெரும் அழிவுகளையும் சந்தித்துள்ளது. இரண்டாம் மொழியொன்றை பொதுவாக விருத்தி செய்வதில் கல்வித்துறையின் தோல்வி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இப்போது ஆங்கிலமொழி மூல கல்வி பல்வேறு காரணங்களை முன்வைத்து வலியுறுத்தப்பட்டு வருகிறது இதற்கான பொதுவான காரணமாக வேலை வாய்ப்பு உயர்கல்வி போன்ற காரணங்கள் இருப்பது உணரத்தக்கது.

பெரும்பாலான மேலைத்தேய நாடுகளும் தொழிற்றுறை வளர்ச்சியை பெருமளவில் சாதித்துள்ள ஜப்பான் சீனா போன்ற நாடுகளும் தாய் மொழிக்கல்வி கொள்கையையே பின்பற்றுகின்றன மாறாக தென்னாசிய நாடுகளிடையே ஆங்கில மோகம் தலைவரித்தாடுவதற்கு காரணம் காலனித்துவ மன நிலையே ஆகும்; இதே வேளை மேலைத்தேய நாடுகளில் சிறுவயதிலிருந்து இரண்டாம் மொழிக்கல்வி புகட்டப்படுவதோடு அவர்களால் வேலை வாய்ப்பொன்றை ஐரோப்பிய நாடொன்றில் பெற இயலுமாயிருப்பதும் தாய் மொழிக்கல்வி தொடர்வதற்கு ஒரு காரணமாகும்.

இலங்கை போன்ற நாடுகள் தமது நாட்டை மையப்படுத்திய சுய பொருளாதாரக்கொள்கை ஒன்றைக் கொண்டிராதபோது சுயாதீனக்கல்விக் கொள்கை ஒன்றையும் கொண்டிருக்கவியலாது. இங்கு தாய்மொழிக்கல்வியை அமுல்படுத்துவதில் மையமான பிரச்சனை இதுவே.

**மருத்துவ ஒழுக்கவியல் (Medical Ethics)**
**(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)**

1. மருத்துவ ஒழுக்கவியலுக்கான அறிமுகம்
2. மருத்துவர்க்கும் நோயாளிக்கும் இடையில் உள்ள உறவு
3. கருக்கலைப்பு
4. சுக மரணம் / கருணைக்கொலை
5. செயற்கைச் சினைப்படுத்தல்




**வேண்டப்படாத கர்ப்பம் தங்கிவிட்டால் என்ன நடக்கிறது?**

கருக்கலைப்புச் செய்கிறார்கள். கருக்கலைப்பு இங்கு சட்டபூர்வமானது அல்ல என்பதால் ஒளித்து மறைத்து செய்கிறார்கள். எந்தவிலை கொடுத்தேனும் செய்கிறார்கள்.

ஒளிவு மறைவாகச் செய்யப்படுவதால் மருத்துவர் அல்லாதவர்களால்தான் பெரும்பாலும் செய்யப்படுகிறது.

பயிற்சி அற்றவர்கள் செய்வதால் இசகுபிசகாகச் செய்யப்பட்டு பல உயிரிழப்புகள் நடக்கின்றன.

அத்தோடு இவற்றில் பல, சுகாதார முறைப்படி செய்யப்படாததால் கிருமித் தொற்றுகள் ஏற்பட்டு மேலும் இழப்புகள் தொடர்கின்றன.

தனது பிரசைகளின் நல்வாழ்க்கை, ஆரோக்கியம், உயிர் உத்திரவாதம் ஆகியவற்றை காக்கும் கடமை அரசுக்கு உண்டு.

சட்ட உருவாக்கத்தில் உள்ளவர்கள் பண்டைய வாழ்வின் பெருமைகளை மட்டும் எண்ணிக் கொண்டிருக்காது கண்ணைத் திறந்து இன்றைய நடப்பைக் கவனிக்க வேண்டும். அவர்கள் பிரச்சனையை மனிதாபிமான உணர்வுடன் அணுக வேண்டும்.

கருக்கலைப்பை சட்டபூர்வமானதாக்க வேண்டும்.

ஆயினும் கருக்கலைப்பு என்பது கருத்தடை முறைகளுக்கான மாற்று முறை அல்ல என்பதையும் தெளிவாகப் புரிந்து கொள்வது அவசியம்.

எமது நாட்டைவிட நீண்ட காலாசார வரலாற்றைக் கொண்ட இந்திய அரசு கருக்கலைப்பை பல வருடங்களுக்கு முன்பே சட்ட பூர்வமாக்கிவிட்டது.

எனவே சமூக அக்கறை கொண்ட ஒவ்வொருவரும் இப் பிரச்சனை பற்றி வெளிப்படையாகப் பேசுவது அவசியம்.

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
[http://hainalama.wordpress.com]

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
cc BY NC SA